# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.88/2025

### அ.சா.11 (LW 17 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **திரு. சரவணன்** | **தொழில்** | |
| **த/ பெயர்** | பெரியசாமி | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **25.08.2026** |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 ம் எதிரி ஆஜர். 2 ம் எதிரி ஆஜரில்லை. 3 ம் எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது திண்டுக்கல் நகர் மேற்கு காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.03.2019 அன்று 23.30 மணிக்கு திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலைய குற்ற எண். 183/2019 ல் பதிவு செய்யப்பட்ட இதச பிரிவுகள் 294(b),302. 506(2) வழக்கில் பதியப்பட்ட முதல் தகவல் அறிக்கையை துரித தபாலாக பெற்று திண்டுக்கல் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் உள்ள நீதித்துறை நடுவர் எண்.2 அவர்களிடம் 19.03.2019 அதிகாலை 12.15 மணிக்கு நீதிமன்ற ஊழியர்களிடம் விசாரித்து அகால நேரம் என்பதால் சேர்ப்பிக்க முடியாமல் போய் அதிகாலை 03.00 மணிக்கு நீதித்துறை நடுவர் எண்.2 இல்லத்திற்கே சென்று சேர்ப்பித்தேன். அதன் அசலையும் புகாரையும் சேர்ப்பித்து ஒப்புகை பெற்றேன். அதன் அடிப்படையில் சம்மந்தப்பட்ட அலுவலகத்திற்கு சென்று துரித தபாலை ஒப்படைத்தேன். பின்பு நிலையம் வந்து பாஸ்போட்டை ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**<u>1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

துரித தபாலை இரவு 11.30 மணிக்கு ஆய்வாளரிடம் வாங்கினேன். எங்கள் காவல் நிலையத்திலிருந்து நீதிமன்ற வளாகத்திற்கு இருசக்கர வாகனத்தில் வந்தால் 15,20 நிமிடத்தில் வரலாம். ஆய்வாளர் விசாரணையில் 12.15 மணிக்கு நான் நீதிமன்றத்திற்கு வந்ததாகவும் அந்த நேரத்தில் நடுவரை பார்க்க முடியாமல் போன விசயத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். ஆய்வாளர் விசாரணையில் 12.15 மணியிலிருந்து அதிகாலை 03.00 மணி நான் காவல்நிலையத்திலிருந்தேனா அல்லது நீதிமன்றத்தில் இருந்தேனா என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என்னிடம் துரித தபாலை காலதாமதமாகத்தான் ஒப்படைக்கப்பட்டது

என்றாலும் அதனால் நான் அதிகாலை 03.00 மணிக்கு சேர்ப்பித்தேன் என்றால் சரியல்ல. ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்காக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2,3 எதிரிகள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணையை அனுசரித்து ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.**

**மறு விசாரணை - இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.08.25 20:12:11 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.